## அனுசரணையாளர்கள்

எமது நிறுவனம் யு.என்.டி.பி. , ஐ.டி.ஆர்.சி. , ஐ.சி.டி.பி. , ஐ.எம்.டி. ஏ.பி.சி.சி. , லெமென்ட் டோஹெர்டி புவி கண்காணிப்பு, பீஜிங் காலநிலை மன்றம், தேசிய விஞ்ஞான மன்றம் ஆகியவற்றால் ஆதரிக்கப்படுகின்றது.

## உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| லரீப் சுபைர் | : பிரதான விஞ்ஞானி |
| ரிம்ஸா ஸெகி | : கணக்கு பதிவியல் |
| பி. விக்கரமகமகே | : புவியியல் |
| பி. எச். டி. குசுமாவதி | : நோய்த்தொற்றியல் |
| ஜனன் விஸ்வநாதன் | : தகவல் தொழில் நுட்பம் |
| ருச்சிர லோகுஹெட்டி | : கணித பகுப்பாய்வு |
| துவான் ஹாஜி | : நிர்வாகம் |
| பாத்திமா ஷாகிரா | : செயலாளர் |
| அஷாரா நிஜாம்தீன் | : விவசாய விஞ்ஞானம் |
| ஷிப்னா ரமீஸ் | : தொடர்பாடல் |
| மஹசேன் ரந்திவெல | : புவியியல் |
| ருஸ்தா சாலிஹ் | : சுற்றுச்சூழல் விஞ்ஞானம் |

## ஆலோசகர்கள்

| | |
|---|---|
| மிக்கேல் பெல் | : காலநிலை தகவல் |
| அஜித் குணரத்ன | : பிரயோக கணிதம் |
| எச். மந்த்ரிதிலக | : நீர் வள பொறியியல் |
| நளின் விக்ரமநாயக | : கரையோர மற்றும் நீர் வளங்கள் |
| நீல் தேவதாசன் | : கணினி பொறியியல் |
| விதுர ரலபனாவ | : தகவல் தொழில் நுட்பம் |
| எம்.ஸாஹிட். | : காலநிலை விஞ்ஞானம் |

## இணை அறிஞர்கள்

| | |
|---|---|
| ரன்மலீ பண்டார | : நில மேற்பரப்பு உருவாக்குபவர் |
| மதுர வீரசேகர | : ஜி.ஐ.எஸ் மற்றும் இயற்கை வளங்கள் |
| செவ்வந்தி சந்திரசேகர | : நீர் முகாமைத்துவம் |
| சஞ்செய ரத்னாயக்க | : தகவல் தொழில் நுட்பம் |

## சிற்றேடு வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு

• சயன குணதிலக • துவான் ஹாஜி • ஷிப்னா ரமீஸ்

## இந்த நிறுவனத்தைப்பற்றி

**நோக்கம்**

"காலநிலை, சுற்றுச்சூழல், தகவல் தொழில் நுட்பம் மற்றும் இவை சார்ந்த துறைகளில் நிலையான சிந்தனை களஞ்சியமாகவும் தலைசிறந்த நிறுவனமாகவும் செயற்படுவதன் மூலம் தரமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அதன் மூலம், சமூக நலன் கருதி, நிலையான வளர்ச்சிக்கும் தொழில் நுட்ப பரிணாம வளர்ச்சிக்கும் ஆதரவு வழங்குதல்."

## எங்கள் பங்களிப்புகள்

» காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வு.

» காலநிலை தழுவல் திட்டங்கள் செயற்றப்படுத்தப்பட்டன

» ஆராய்ச்சிக்கான உள்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது

» 1997 முதல், 40 க்கும் மேற்பட்ட இளம் ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது

இந்த திட்டங்ளை மேற்கொள்வதற்காக 2003 ஆம் ஆண்டு காலநிலை, சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (FECT) இலாப நோக்கமற்ற சங்கமாக ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனம், காலநிலை, நீர்வள இயல், தழுவல், தகவல் தொழில் நுட்பம், சமூக விஞ்ஞானம் மற்றும் பொறியியல் ஆகிய துறைகளின் நிலையான வளர்ச்சிக்கு பங்களிக்கின்றது. இந்நிறுவனம் இலாப நோக்கமின்றி சமூக நலனுக்காக கடமைபுரிகின்றது.

## நிறுவன விபரங்கள்

| | |
|---|---|
| நிறுவனத்தின் பெயர் | : காலநிலை, சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் |
| பதிவு எண் | : N(A)1148 & GA 56 (2008) |
| இணைந்த திகதி | : டிசம்பர் 31, 2003 |
| நிறுவனத்தின் செயலாளர் | : ரலபனாவ கூட்டுத்தாபனம் (Ralapanawa Associates) |
| கணக்காய்வாளர் | : அன்சாரி மற்றும் நிறுவனம் |
| வங்கியாளர்கள் | : மக்கள் வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி |

## மேலதிக விபரங்களுக்கு

| | |
|---|---|
| Websites | : http://www.climate.lk<br>http://www.tropicalclimate.org |
| Facebook | : http://facebook.com/fectsl |
| Twitter | : http://twitter.com/fectlk |
| Wordpress | : http://srilankaclimate.wordpress.com |
| Blogger | : http://fectlk.blogspot.com |

## தொடர்புகளுக்கு


காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் தொழில்நுட்ப நிறுவனம்,
76/2, மாத்தளை வீதி, அக்குறணை, KY 20850, Sri Lanka.
தொலைபேசி : +94-81-2376746, +94-81-4922992
மின்னஞ்சல் : info@tropicalclimate.org & fectsl@gmail.com


FECT

Foundation for Environment, Climate and Technology

# FOUNDATION FOR ENVIRONMENT CLIMATE AND TECHNOLOGY



காலநிலை சேவைகள்



காலநிலை தழுவல் மற்றும் சுற்றுச்சூழல்



கல்வி மற்றும் பயிற்சி

# நடைமுறையில் உள்ள திட்டங்கள்


### *இலங்கை மாலைத்தீவு ஆகிய நாடுகளில் வறட்சி, வெள்ளம், நிலச்சரிவு போன்ற அபாயங்களை கணிப்புத் தரவுகளிலினூடாக மதிப்பீடு செய்ய முடியுமா? (2015–2018)*



வறட்சி, வெள்ளப்பெருக்கின் நிகழ்தகவை மதிப்பிடுவதற்கு பல குறிக்காட்டிகளை இணைக்கும் ஒரு பகுப்பாய்வு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வேலைப்பாடானது காலநிலை மற்றும் நில மேற்பரப்பு மாதிரி, அனர்த்தங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.


அனுசரணை - US National Academy of Science,USAID.

### *காலநிலை மாற்றம் மலைநாட்டின் தேயிலை பயிர்ச்செய்கை மீது கொண்டுள்ள தாக்கம்.*



இச்செயற்திட்டம் Tropical Climate மற்றும் FECT நிறுவனங்களின் விஞ்ஞானியால் பேராதனை பல்கலைகழகத்தின் எமது பங்குதாரர்களுடன் இணைந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கமானது, இலங்கையின் தேயிலை பயிர்ச்செய்கையில் காலநிலை கொண்டுள்ள தாக்கத்தை கண்டறிவதேயாகும். இத்திட்டம் பிரதானமாக தேயிலை உற்பத்தி, விளைச்சல் மற்றும் அதன் தரம் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.

### *மகாவலி நீர் வள முகாமைத்துவத்திற்கான காலநிலை தகவல்கள் (2000 - 2004, 2008 – இன்று வரை)*



நீர் வள முகாமைத்துவத்திற்கான காலநிலை தகவல்களை கண்டறிய செயன்முறைகளை உருவாக்கியுள்ளோம். 2008 ஆம் ஆண்டு முதல் நாம் (FECT), மகாவலி அதிகாரத்திற்கு (MASL) வாராந்தர நீர்வளவியல் ஆலோசனைகளை வழங்குகின்றோம். இதற்கு IRI, மகாவலி அதிகார சபை, IFS-Sweden மூலம் அனுசரணை வழங்கப்படுகின்றது.

# செய்து முடிக்கப்பட்ட திட்டங்கள்

### *இலங்கையிலும் மாலைத்தீவிலும் வறட்சி கண்காணிப்பு மற்றும் காலநிலை மாற்ற மதிப்பீடு (2014 - 2017)*



தென் ஆசிய பிராந்தியத்தில் ஏற்படும் வறட்சியினை கண்காணிக்கும் முகமாக (சுமார் 20 ஆண்டுகளுக்கு) மாலைத்தீவு தேசிய பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயன்முறைகளை உருவாக்குதல், காலநிலை மாற்றக்கணிப்பின் குறைபாடுகளை கண்டறிந்து அபிவிருத்தி செய்தல்.

அனுசரணை - US National Academy of Science, USAID.

### *CCAFS க்கான தென் ஆசியா மூலோபாய வளர்ச்சி,பயிர் விளைச்சல் முன்கணிப்புக்கான கருவி (2010 -2015)*



FECT தெற்காசிய மூலோபாய வளர்ச்சிக்கு பங்களித்துள்ளது. மேலும் இலங்கை விவசாயத்துறைக்கு விளைச்சலை முன்கணிக்கும் திட்டமொன்றை உருவாக்க உதவியது.

அனுசரணை - CGIAR காலநிலை மாற்றம், விவசாய மற்றும் உணவு பாதுகாப்பு திட்டம் (CCAFS).

### *இலங்கை மாலைத்தீவிற்கான நீர் வள முகாமைத்துவத்திற்கான உள்ளக பருவகால வானிலை கணிப்புகள் (2012 -2015)*




தேசிய நீர் முகாமையாளர்களுக்கு வாராந்த காலநிலை அறிவிப்பு ஒன்றை வழங்குவதன் மூலம், ஒரு சில நாட்கள் முதல் ஒரு மாதத்திற்கான, காலநிலை மாற்றத்தை கண்டறிந்துள்ளோம். முதன்மை (pilot) ஆய்வுகளின் மூலம் இலங்கையில் மகாவலி ஆற்றோடு இணையும் பிங்கா ஓயாவில் ஏற்படும் வெள்ளம் மற்றும் மாலைத்தீவின் மாலே (Male) பகுதியில் வறட்சி ஏற்படுவதற்கான காரணங்களையும் கண்டறிந்துள்ளோம். நாம் பருவகாலங்களின் மற்றும் பருவகால மாற்றத்தின் பயன்பாட்டினை மதிப்பிட்டுள்ளோம். அனுசரணை - (US National Academy of Science, USAID)

### *அபிவிருத்திப்பயிற்சியில் முதுநிலைப்பட்டம், பேராதனை பல்கலைக்கழகம் (2010 - 2016)*



FECT நிறுவனம் நிலையான அபிவிருத்தியில் கவனம் செலுத்தும் பட்டதாரி பாடநெறியொன்றை உருவாக்குவதில் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு துணைபுரிந்தது. எமது நிறுவனம் பாடத்திட்ட வளர்ச்சிக்கும், கற்பித்தல் செயற்பாடுகளுக்கும், ஆராய்ச்சிகளை நடத்திச்செல்வதற்கும், பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கும் ஆதரவு வழங்கியது. மேலும் மாலைத்த்தீவின் தேசிய பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியும் பயிற்சியும் மேற்கொண்டோம். அனுசரணை - மெக் ஆர்தர் நிறுவனம், USA.

### *விவசாய அமைப்புகள் மற்றும் உணவு பாதுகாப்பு ஆகியவற்றில் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை மாதிரியாக அமைத்தல் (2012 – 2014)*




இத்திட்டத்தின் போது, குருநாகல் மாவட்டத்தில் பயிர், பொருளாதாரம் மற்றும் விவசாய அமைப்புகள் மீது காலநிலை மாற்றம் கொண்டுள்ள தாக்கமும் அதன் விளைவுகளும் மாதிரியாக அமைக்கப்பட்டன. இச்செயற்பாடானது பேராதனை, ரஜரட, ருஹுன பல்கலைக்கழகங்க ளுடனும் வேளாண்மை மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்துடனும் இணைந்து செயற்படுத்தப்பட்டது. விவசாய மாதிரி ஒப்பீடு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் மூலம் அனுசரணை வழங்கப்பட்டது.

### *இலங்கையில் டெங்கு அபாயமும் காலநிலையுடனான அதன் தொடர்பும் (2010 - 2011)*




இலங்கையில் டெங்கு காய்ச்சலின் பிராந்திய மற்றும் பருவகால வேறுபாடுகள் மதிப்பிடப்பட்டன. இதன் கண்டுபிடிப்புக்களை அடிப்படையாகக்கொண்டு புதியத் திட்டமொன்று முன்மொழியப்பட்டது.

அனுசரணை - WHO – SEARO



### *காலநிலை மாறுபாடும் அரிசி உற்பத்தியும் (2000, 2010)*

இலங்கையின் மாவட்டங்களின் அடிப்படையில், அரிசி உற்பத்தி , விளைச்சல் மற்றும் பரப்பு ஆகியவற்றின் மீது எல் நினோ தெற்கு அலைவு கொண்டுள்ள தாக்கம் குறித்து ஆராயப்பட்டது.

அனுசரணை – SEARCA - FAO



### *பருவகாலத்திற்கு அமைய திறக்கும் அலை வாயில்களில் காலநிலை மாற்றம் கொண்டுள்ள தாக்கங்கள் (2009)*

பூகோள காலநிலை மாற்றத்தின் அடிப்படையில் இலங்கைக்கு காலநிலை மாற்றத்திற்கான பருவகால, பிராந்திய மாறுபாடுகளைக் கையாளுவதில் நாங்கள் ஒத்துழைத்தோம். UNESCO – IHE மூலம் அனுசரணை வழங்கப்பட்டது.



### *வறட்சி மதிப்பீடு மற்றும் மழை நீர் சேகரிப்பு (2007-2008)*

இத்திட்டத்தினால் ஹங்குரங்கெத்த பிரதேசத்தில் நீர் பற்றாக்குறை மதிப்பிடப்பட்டது. மேலும் மழை நீரை சேகரிக்கும் முகமாக காலநிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அனுசரணை - PROVENTION CONSORTIUM



### *மலேரியா பரவலில் காலநிலை மாற்றம் கொண்டுள்ள தாக்கமும் மலேரியா அபாயத்தை வரைபடமிடலும் (2003 - 2008)*


காலநிலை மற்றும் சமுதாயத்திற்கான சர்வதேச ஆராய்ச்சிக் கழகத்துடனும் (IRI), மலேரியா எதிர்ப்பு பிரச்சாரத்துடனும், சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்துடனும் (IWMI), இணைந்து செயலாற்றினோம். உப மாவட்ட அளவிலான மலேரியா அபாயத்திற்கு காலநிலை தொடர்புகளை வகைப்படுத்தியுள்ளோம். உலகளாவிய திட்டங்களின் அலுவலகத்தால் (NOAA) நிதியளிக்கப்பட்டது.

### *காலநிலையும் இயற்கை அனர்தங்களுக்கான அபாயமும் (2002 – 2005)*



இலங்கையில் வறட்சி, வெள்ளம், நிலச்சரிவுகள் மற்றும் சூறாவளிகள் போன்ற பல இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் இடர்களை கண்டறியப்பட்டன. இதற்கு உலக வங்கி, பூமி நிறுவனத்தின் மூலம் (Earth Institute) நிதி வழங்கப்பட்டது.

### *தேயிலை, தெங்கு ஆகிய பயிர்ச்செய்கைகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கம் (2002 – 2005)*



இத் திட்டம் தெங்கு, தேயிலை ஆராய்ச்சி நிறுவனங்களின்உதவியுடன்முன்னெடுக்கப்பட்டது. இதன் மூலம் தேயிலை மற்றும் தெங்கு தோட்டங்களில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. இத்திட்டத்திற்கு IRI, Department of Meteorology, TRI and CRI ஆகிய நிறுவனங்கள் சம்பந்தப்பட்டன. அனுசரணை - பகுப்பாய்வு முறை ஆய்வு பயிற்சி, இலங்கை விஞ்ஞான வளர்ச்சிக்கான கூட்டமைப்பு.

### *காலநிலையும் மனித யானை முருகலும் (2001 – 2004)*



இத்திட்டத்தினால் மனித யானை முருகலில் பருவகால மற்றும் வெப்ப நிலை மாறுபாடுகளின் தாக்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதற்கு மகாவலி அதிகார சபையின் சுற்றுச்சூழல், வனவியல் மற்றும் பாதுகாப்புப் பிரிவும் வன பாதுகாப்பு நிறுவனமும் உதவி வழங்கின. IRI, புவி நிறுவனத்தால் (Earth Institute) நிதியளிக்கப்பட்டது.